மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

49—

தொழிற்பேட்டை

***35969—திரு. எஸ். பவுன்ராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, குத்தாலம் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, குத்தாலம் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.

திரு. எஸ். பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

எனது பூம்புகார் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், விவசாயத் தொழிலைத் தவிர வேறு எந்தத் தொழிலும் இல்லாத பகுதியாக இருக்கிறது. ஏறக்குறைய, 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து முடித்து வேலையில்லாமல் இருக்கின்றனர். மழை பெய்யாத காரணத்தினால் விவசாயத் தொழிலையே அங்கே செய்ய முடியாத சூழ்நிலை நிலவுகிறது. படித்த இளைஞர்களுக்கு

2019 ஜூலை 5]

வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையில் அங்கே தொழிற்பேட்டை ஒன்றை அமைத்துக் கொடுத்தால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள குத்தாலம் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க நாகப்பட்டினம் மாவட்ட நிருவாகத்துடன் சிட்கோ நிறுவனத்தால் கலந்தாலோசிக்கப்பட்டது. குத்தாலம் ஒன்றியத்தில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க தேவையான 15 முதல் 30 ஏக்கர் வரையிலான அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதுமில்லை எனவும், மேலும், பூம்புகார் தொகுதிக்குட்பட்ட தரங்கம்பாடி, சீர்காழி, மயிலாடுதுறை மற்றும் செம்பனார்கோவில் வட்டங்களிலும் சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்குத் தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதுமில்லை எனவும் நாகப்பட்டினம் மாவட்ட நிருவாகம் தெரிவித்துள்ளது. எனவே, பூம்புகார் சட்டமன்றத் தொகுதி, குத்தாலம் ஒன்றியத்தில் உகந்த நிலங்கள் கிடைக்கப்பெறாததால் அங்கே சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.

முற்பகல் 11–30

திரு. எஸ். பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகுதியில் வாழும் 85 சதவிகிதத்திற்கும் மேலான மக்கள் விவசாயத் தொழிலையும், 15 சதவிகித மக்கள் மீன்பிடித் தொழிலையும் செய்து வருகின்றனர். இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியை நடத்தி வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தை கையகப்படுத்தி, அங்கே ஒரு தொழிற்பேட்டை அமைத்துக் கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். வளர்ந்து வருகின்ற இந்த விஞ்ஞான உலகத்திலே, விவசாயத்தினை மட்டுமே நம்பி வாழ்ந்து வருகின்ற அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு அங்கே ஒரு தொழிற்பேட்டை அமைத்துக்கொடுத்தால், பட்டயப் படிப்பு படித்துள்ள ஏறக்குறைய 10,000 முதல் 15,000 மாணவர்கள் வரை இருக்கக்கூடிய அந்தப் பகுதியிலே அவர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அங்கே ஒரு தொழிற்பேட்டை அமைத்துக் கொடுத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல் பூம்புகார், சீர்காழி மற்றும் மயிலாடுதுறை தொகுதிகளில் இருக்கின்ற படித்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை முன் நிறுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அந்த தொழிற்பேட்டையை அவசியம் அமைத்துக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்தில் 20.97 ஏக்கர் நிலப் பரப்பளவில் ஒரு தொழிற்பேட்டையும், மயிலாடுதுறையில் 12.56 ஏக்கர் நிலப் பரப்பளவில் ஒரு தொழிற்பேட்டையும், ஆக மொத்தம் இரண்டு தொழிற்பேட்டைகள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், அவர் சார்ந்திருக்கக்கூடிய பூம்புகார் சட்டமன்றத் தொகுதியில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். தேவையின் அடிப்படையில் நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

2019 ஜூலை 5]

மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.*

திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் எந்தவித தொழிற்சாலைகளும் இல்லை. கனரகத் தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கான வாய்ப்பும் அங்கு இல்லை. ஆனால், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை அங்கு சிறப்பாக நடத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. குறிப்பாக அங்கே அதிகமாக பயிரிடப்படுகின்ற இரப்பரை மூலப்பொருளாக வைத்து தயாரிக்கப்படுகின்ற பொருட்கள், இரப்பர் மூலமாக தயாரிக்கப்படுகின்ற உதிரி பாகங்கள், இதுபோன்ற சிறிய பொருட்களைத் தயாரிக்கின்ற தொழிற்கூடங்களை அமைத்தால் அது மிகச் சிறப்பாக இருக்கும். அதுபோல் நறுமணப் பொருட்கள் அதிகமாக அங்கே கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. குறிப்பாக கிராம்பு, ஜாதிக்காய், ஏலம், மிளகு போன்றவை அங்கே பெருமளவில் விளைவிக்கப்படுகின்ற காரணத்தினால், அவற்றை வைத்து வாசனைப் பொருட்களை தயாரிக்கின்ற முயற்சிகளில் அரசு முன்வரலாம். படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் அங்கே இருக்கின்றார்கள். எனவே உங்களுடைய துறையின் மூலமாக அந்த இளைஞர்களுக்கு நல்ல தொழில் தொடங்குவதற்கான தொழிற்பயிற்சியும் வழங்கி, அத்துடன் மானியத்துடன்கூடிய கடன் வசதியும் பெற்றுக் கொடுத்தால் நிச்சயமாக அங்கு நிலவிவருகின்ற வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கு மிகப் பெரிய முற்றுப்புள்ளி வைப்பதோடு, நமது நாட்டினுடைய உற்பத்தியினை மிகப் பெரிய அளவில் பெருக்கலாம். இதற்கு நமது அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதியினுடைய*

சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தான் சார்ந்திருக்கக்கூடிய சட்டமன்றத் தொகுதியில் புதிய தொழிற்பேட்டையும், அதுபோல் தொழிற்பேட்டை துவங்குவதற்கு முன்பாக அவர்களுக்கு பயிற்சி அளிப்பது குறித்தும், இங்கே கேட்டுள்ளார்கள். அவர் சார்ந்திருக்கக்கூடிய கன்னியாகுமரி மாவட்டத்தில், ஏறத்தாழ 18,592 ஹெக்டேர் நிலத்தில் இரப்பர் பயிரிடப்படுகின்றது. இம்மாவட்டத்தில் 27 இரப்பர் உற்பத்தியாளர்கள் சங்கம் இரப்பர் வாரியத்தால் பதிவுசெய்யப்பட்டு இயங்கி வருகின்றன. Rubber band, இரப்பர் பந்துகள், இரப்பர் பலூன்கள், இரப்பர் அழிப்பான்கள், இரப்பர் கையுறைகள் போன்ற இரப்பர் அடிப்படையிலான தொழில்களுக்கு இம்மாவட்டத்தில் வாய்ப்புகள் உள்ளன. இரப்பரை அடிப்படையாகக் கொண்ட மருத்துவக் கையுறைகள்—Surgical gloves தயாரிக்கும் இரண்டு நிறுவனங்கள் இம்மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இரப்பர் தொழிலுக்கு உத்வேகம் அளிக்கும் நோக்கத்தோடு இரப்பர் மற்றும் இரப்பர் சார்ந்த பொருட்கள் தயாரிக்கும் தொழில்கள், அதேபோன்று அவர் சொல்லியிருக்கின்ற மிளகை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை அங்கே தொடங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–35

அதுபோல், இரப்பர் மற்றும் இரப்பர் சார்ந்த பொருட்கள் தயாரிக்கும் தொழில்கள் 25 விழுக்காடு முதலீடு மானியத்திற்கு தகுதிபெறும் வகையில் சிறப்புவகை தொழில்கள் பட்டியலின்கீழ் கொண்டுவரப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதன்படி, தமிழகத்தின் எப்பகுதியிலும் தொடங்கப்படும் இரப்பர் மற்றும் இரப்பர் சார்ந்த பொருட்கள் தயாரிக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், நிறுவப்படும் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் மதிப்பில் முதலீட்டு மானியமாக 25 சதவிகிதம் அல்லது அதிகபட்சமாக 30 இலட்சம் ரூபாய் வரை பெறத் தகுதியுடையவையாக இருக்கின்றன. தகுதியின் அடிப்படையில் குறைந்தழுத்த மின் மானியம் மற்றும் மின்னாக்கி மானியமும் வழங்கப்படுகின்றன. மேலும், NEEDS மற்றும் UYEGP ஆகிய திட்டங்களின்மூலம் முறையே ரூ.5 கோடி வரை மற்றும் ரூ.10 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2018–2019 ஆம் ஆண்டு வரை இரப்பர்

2019 ஜூலை 5]

பொருட்கள் தயாரிக்கும் 57 நிறுவனங்களுக்கு 348 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி புதிய தொழிற்பேட்டை அமைக்க 15 முதல் 30 ஏக்கர் வரையான அரசு புறம்போக்கு நிலம் கிடைக்கும்பட்சத்திலும் போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும் தொழில் தொடங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வரும் நிலையிலும், அதேபோன்று தொழில் முனைவோர் சங்கம் குறைந்தபட்சம் 50 ஏக்கர் நிலத்துடன், தனியார் நிறுவனங்களுடன் தொழிற்பேட்டை அமைக்க முன்வரும் நிலையிலும், தொழிற்பேட்டை அமைப்பது குறித்து மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

50—

பேருந்து வசதி

***48733—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம், கீழ்பாப்பனம் மற்றும் மேல்பாப்பனம் மலைக் கிராமங்களுக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கீழ்பாப்பனம் மற்றும் மேல்பாப்பனம் ஆகிய பகுதிகளில் தட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நாமக்கல்